# எங்கட புத்தகங்கள்...

## எம்மவர்களின் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் - 2020



**எழுத்தாளர் அறிமுக ஏடு**

# எங்கட புத்தகங்கள்...

## எம்மவர்களின் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் - 2020

### எழுத்தாளர் அறிமுக ஏடு

யாழ் வர்த்தக தொழிற்துறை மன்றத்தின்
தலைவர் திரு. கே. விக்னேஷ்
அவர்களின் வாழ்த்துக்களோடு...



## எங்கட புத்தகங்கள்...



ஒரு வாசகனாக எனது பத்தாண்டுகால ஆதங்கம் தீரும் நாள் இன்று. முதலாவது யாழ் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் வர்த்தகக் கண்காட்சியில் புத்தக காட்சியறைகளையும் விற்பனைக் கூடங்களையும் தேடி ஏமாற்றம் அடைந்திருக்கிறேன். அந்த ஏமாற்றத்தின் வெளிப்பாடே என்னை இவ்வாறான ஒரு புத்தகக் கண்காட்சி மற்றும் விற்பனையை ஒழுங்குசெய்யத் தூண்டியது.

அந்தத் தூண்டுதலாலேயே "எங்கட புத்தகங்கள்" என்ற தலைப்பில் யாழ் வர்த்தக சம்மேளனத்தின் கொட்டகையில் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் ஒழுங்கு செய்யப்படுகிறது.

120 இற்கும் மேற்பட்ட எழுத்தாளர்களின் 200 இற்கும் மேற்பட்ட புத்தகங்களின் 2500 இற்கும் அதிகமான பிரதிகள் இந்தக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்பட உள்ளன.

இலாப நோக்கம் கருதாமல் என்னோடு இணைந்து இந்த ஒருங்கமைப்பு பணியில் பல்வேறு தரப்பினரும் ஈடுபட்டுள்ளார்கள். அவர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, "எங்கட புத்தகங்கள்" இன்னும் உச்சங்களைத் தொடும். அதற்கான முயற்சியை தொடர்ந்தும் செய்ய வேண்டும் என அனைவரினதும் ஒத்துழைப்பை வேண்டி நிற்கிறேன். இந்த ஒழுங்கு படுத்தலின் இறுதி நாட்களில் "எங்கட புத்தகங்கள்" கண்காட்சியில் இணைய விரும்பியவர்களை இணைத்துக் கொள்ள இயலவில்லை. அடுத்தடுத்த ஆண்டுகளில் எங்கட எழுத்தாளர்களின் நூல்கள் மேலும் பெருகும் என்பதை அறிவேன். எங்கட புத்தகங்கள் எங்கட எழுத்தாளர்களாலும் எங்கட வாசகர்களாலும் கொண்டாடப் படுவது மகிழ்ச்சியளிக்கிறது. பணியில் இணைந்திருப்போம்.

நன்றி.

குலசிங்கம் வசீகரன்
22.01.2010



2010 இன் தொடக்கத்தில் "எங்கட புத்தகங்கள்" கண்காட்சியும், விற்பனையும் பிரதானமாக வாசிப்பின் மீதான விருப்பினை ஆழப்படுத்துவதும், ஊக்கப்படுத்துவதும் அவைபற்றி விரிவாக உரையாடும் தொடர்ச்சியின் ஒரு நிகழ்வாகும்.. புத்தகம், எழுத்தாளர், வாசகர் என அறிமுகமாகும் ஒரு கூடமுமாகும்.

அத்துடன் எழுத்தாளருக்குரிய பணம் எழுத்தாளருக்குக் கிடைக்க வேண்டும் என்ற விருப்பமும், தொடர் கலை, இலக்கிய செயற்பாட்டின் ஒரு பகுதியுமாகும். குறிப்பாக யாழ்ப்பாணத்தை மையப்படுத்தியதாக நவீன கலை இலக்கியச் செயற்பாடு நீண்டதும் செழுமை மிக்கதும் ஆகும். ஆளுமைமிக்க பல்வேறுபட்ட தனிமனிதர்களாலும் கூட்டு முயற்சியாலும் கட்டமைக்கப்பட்டது கலை இலக்கிய சிற்றிதழ்கள், பிரதேச கலை இலக்கிய அமைப்புகள் அர்ப்பணிப்புடனும் திட சித்தத்துடன் இயங்கி வந்தன் வருவன. இந்த அமைப்புகளின் பொறுப்புகள், சமூக பெறுமதிகள் வெகுஜன தளத்தில் பரவலாக்கப்படாமை இவற்றின் செயல்பாடுகளில் காலத்திற்குக்காலம் ஒரு தேக்க நிலையை உருவாக்குகிறது என எண்ணத் தோன்றியதும் எங்கட புத்தகங்கள்க்கான காரணமும் ஆகலாம். பெரும் வர்த்தகச் சந்தையான யாழ்ப்பாணம் வர்த்தகச் சந்தை 2010இல் நாம் எங்கட புத்தகங்களை தொடங்குகின்றோம்.

சித்திராதரன்
பருத்தித்துறை



## ஈழத்து எழுத்தாளர்களின் நூல்களைக் கொண்டடங்கிய கண்காட்சியும் விற்பனையும், எங்கட புத்தகங்கள்

கவியோடும் வடலிகளையும் பல கதை புனையும் காற்றோடைகளையும் கொண்ட ஈழத்து இலக்கிய சூழலில், மணல் வீடுகளையும் மாட மாளிகைகளாக்கும் நூலேடுகளும், எழுத்தாணிகளும் பல. அந்தச் சூழலில் இலக்கியச்சுடரை ஏற்றும் ஒரு முதல் விளக்கே இந்த நிகழ்வாகும்.

ஒவ்வொரு நாட்டு இலக்கியங்களும் அதற்கே உரிய தனித்தன்மையையும் மாறாத வியத்திறனையும் கொண்டவை. ஈழமும் அதற்கே உரிய மொழி புனையும் தொடர்களோடு, பின்னணியில் ஆழ்ந்த நிறங்களையும் எதிரொலிகளையும் படரவிட்டிருக்கும் ஒரு இலக்கிய வானை தன்னுள்ளே கொண்டுள்ளது. அந்த வகையில் ஈழநதியில் நீந்தும் மீன்களின் படைப்புருவாக்கங்களை எம்மவரோடு இணைக்கும் செயற்பாடாகும் இந்நிகழ்வு.

குறைந்துவரும் வாசிப்பு பண்பாட்டு நிலைமையில் புத்துயிர்ப்பை எய்த வைக்கவும், எம்மவர்களுள் மிளிரும் எழுத்தாளுமைகளை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தவும் அவர்களை ஊக்கப்படுத்தவும் இது நிச்சயம் உதவும் என்று நான் நம்புகிறேன். நமது பண்பாட்டியலை எமது எதிர்கால சந்ததிக்கு கையளிக்க வேண்டியது நம் அனைவரினதும் கடமையாகும். அதற்குரிய சிறந்த ஆவணங்களான இந்நூல்கள், எம்சூழலின் வாழ்வியலின் சிறு கீறுகள் முதல் பெரு ஒளி வெள்ளம் வரை சென்று அதன் தாரக மந்திரங்களை எடுத்துரைக்கும் அழகிய காகிதங்கள் ஆகும்.

அந்த அழகிய காகிதங்களில் தங்களுடைய ஓவியங்களை சிற்பங்களாக செதுக்கும் வாசகர்கள் இந்தக் கண்காட்சியில் பயனடைவார்கள் என்று நம்புகிறேன்.

ந.றஞ்சி

# புத்தகக் கண்காட்சியும் யாழ்ப்பாணமும்



புத்தகக் கடைகள் எவை, யார் எழுதுகிறார்கள், என்னென்ன வகைகளில் புத்தகங்கள் எழுத்தப் படுகின்றன, நமது காலத்திற்குத் தேவையான நூல்கள் எவை என்பதை அறியவே புத்தகக் கண்காட்சிகள். உலகம் முழுவதிலுமுள்ள அறிவார்ந்த சமூகங்களின் மையமான பண்பாட்டு முதிர்ச்சி என்பது அங்குள்ள புத்தகங்களினதும் அவை பற்றிய அந்தப் பிராந்திய மக்களின் ஈடுபாடு எத்தகையது என்பதினாலுமே கணிக்கப்படக் கூடியது.

எவ்வளவுக்கெவ்வளவு புத்தகங்களை நோக்கியும் உரையாடல்களினை நோக்கியும் மக்கள் வருகின்றனர் என்பதுவும், அவற்றை நுகரத் தயாராக இருக்கின்றனர் என்பதுவும் அவர்கள் எந்தளவு தூரம் இன்றைக்குள்ள மனிதர்களாக தங்களை ஆக்கிக் கொள்ள விரும்புகிறார்கள் என்பதை அளக்கும் அளவுகோல்.

இன்றைக்குள்ள மனிதர்கள் என்றால் இந்தக் காலத்தில் பிறந்து கடந்த காலத்தின் சிந்தனைகளின் வழி தங்களை மரபான மனிதர்களாக மட்டுமே சுருக்கி வாழ்வதல்ல, சிந்தனையில் நிகழ்காலத்திலிருப்பவரே, இன்றைக்குள்ள மனிதர். மனித சமூகம் ஏராளமான சிந்தனைகளின் வழியும் உரையாடல்களின் வழியும், உலகின் கடைசி மனிதருக்கும் வாழ்வதற்கான அறிதல்களை கொண்டு சேர்க்கும் பணியில் ஈடுபட்டு வருகிறது. அதன் தொகுக்கப்பட்ட வடிவங்களே புத்தகங்கள். நாம் உருவாக்கி வைத்திருக்கும் வாழ்க்கை முறைக்கு மாற்றான பல்வேறு மாற்று வாழ்க்கை முறைகளின் சாத்தியங்களை புத்தகங்கள் மனிதருக்கு அளிக்கின்றன. அவற்றை அறிவதும், அவற்றிலிருந்து பொருத்தமானவற்றை ஏற்று நமது வாழ்க்கையை இன்னமும் அர்த்தமும் ஆழமும் உள்ளதாக்கும் புத்தகங்களை அறியவும், எழுத்தாளர்களைப் பற்றி அறியவும் இக்கண்காட்சி மிக முக்கியமானதொரு வாய்ப்பு.

ஈழத்து எழுத்தாளர்களின் புத்தகங்களை காட்சிப்படுத்துவதும் அவற்றைத் திரட்டி பொதுமக்களிடம் முன்வைப்பதும் மிக அவசியமான பணி. புத்தகங்களுக்கான சந்தைகளை உருவாக்குவது நமது பிராந்தியத்தில் தேவையானதொரு பண்பாட்டுச் செயல்பாடு. இத்தகைய செயல்பாடுகளில் சவால்கள் அதிகம், கடின உழைப்பைச் செலவழித்தே இவற்றைச் செய்ய முடியும். இதை ஒழுங்குபடுத்துபவர்களுக்கு இவற்றின் வழியாகக் கிடைக்கும் ஊதியம் என்பது புத்தகங்களை வாசகர்களிடம் கொண்டு சேர்த்தோம் என்கிற மனநிறைவு தான்.

இறுதியில் வாசகர்களே புத்தகக் கண்காட்சிகளின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பவர்கள். அவர்களை நோக்கியே இக் கண்காட்சி திறக்கப்பட்டிருக்கிறது.

கிரிசாந்



# "யாழ். சர்வதேச வர்த்தகக் கண்காட்சி 2010" இல், ஈழத்து நூல்கள்!

ஈழத் தமிழருக்குத் தனியான நிலமும், வரலாறும், பண்பாடும், வாழ்க்கை முறைகளும், பேச்சுமொழியும், பிரச்சினைகளும் உள்ளன. எமது படைப்புகளில் இவை வெளிப்பாடு காண்கின்றன' படைப்பாளிகளின் – தனியாள் வேறுபாடுகளின் திறன்கள், சமூக அக்கறையுடன் அவற்றில் சுவறிப் பரந்துமுள்ளன. பெருமைமிகு முன்னோடி களின் முயற்சிகளுடன், இன்றையத் தலைமுறையும் தனது படைப்பு வெளிப்பாடு களைத் தொடர்கின்றது. "எங்கள் வாழ்வையும் எங்கள் வளத்தையும்" எம்மவரால்தான் வெளிப்படுத்த முடியுமென்பது, ஏற்கெனவே நிஷரூபணமாகியுள்ளது!

பல்லாயிரக்கணக்கான நூல்கள் இதுவரை ஈழத்தில் வெளியாகியுள்ளபோதும், எமது மக்களின் கவனமும் ஆதரவும், உரிய வகையில் அவற்றிற்குக் கிடைக்காத நிலைமைதான் உள்ளது' பாடசாலைக் கல்வியும் சமயமும் சார்ந்த நூல்கள் ஆதரவுபெற்றமை புறநடை! பொதுவில் தமிழக நூல்கள் மீதே ஆதரவு மனப்பாங்கு காட்டப்படுகிறது! எமது நூலகங்களில், வாசிகசாலைகளில், பாடசாலைகளில், வீடுகளில் ஈழத்து நூல்கள் இடம்பெறவேண்டுமென்ற உணர்வு பரவலடையவில்லை!

எமது நூல்களை வாசிக்கவும் விலைக்கு வாங்கிச் சேமிக்கவும் வேண்டிய கடமை எமது மக்களுக்கு உண்டென்பதை நடைமுறையில் உணர்த்துவதற்கு, திட்டமிட்ட செயற்பாடுகள் அவசியமாயுள்ளன. இவ்விழிப்புணர்வுச் செயற்பாடுகள் பாடசாலைகளிலும், சனசமூக நிலையங்களிலும், ஊடகங்களிலும் நடைபெற வேண்டும்' தொடர்ந்த செயற்பாடுகள்தான் காலநகர்வில் நிச்சயம் பயனை அளிக்கும்!

இந்த 'யாழ். சர்வதேச வர்த்தகக் கண்காட்சி'யில், ஈழத்து நூல்களின் காட்சிப் படுத்தலும் விற்பனையும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளமை, வரவேற்கத்தக்க முயற்சி யாகும். ஆயிரக்கணக்கில் மக்கள் வருகைதரும் இக்கண்காட்சியில், ஈழத்து எழுத்தாள ரின் நூல்கள்மீது எமது மக்களின் பார்வை பதியும் கூடவே எமது தனித்துவங்களைக் கொண்ட நூல்களின் முக்கியத்துவத்தையும் அவற்றை ஆதரிக்கவேண்டிய எமது மக்களின் 'பொறுப்பை'யும், அவர்களுக்கு நாம் விளக்கி உணர்த்தவும் வேண்டும்!

தேசியப்பற்றுணர்வுடன் இம்முயற்சியை முன்னெடுக்கும் நண்பர்களுக்கு வாழ்த்துகள்!

அ. யேசுராசா
குருநகர்.



நாம், நமது மண், எமது வாழ்வு, எமது பாரம்பரியம், எமது கலைகள், எமது உறவுகள் என "எங்கட" அனைத்திலும் மகிழ்பவர்களாக, அவற்றை அடையாளம் படுத்த விரும்புவர்களாக நாம் இருக்கிறோம். அதற்கான சூழலில் வாழ்கிறோம். அவற்றைக் காப்பாற்ற வேண்டிய நெருக்கடியும் இருக்கவே செய்கிறது.

இந்த நிலையில் எமது "இருப்பை" உணர்துவதாக இருப்பவை எமது எழுத்துகளும் அதன் வழி பிறந்த "எங்கட புத்தகங்கள்" தான்.

இந்த மண்ணின் பூர்வீக குடிகளான போதும் எமது இருப்பை உணர்த்துவதற்கான தொல்பொருள் சான்றுகள் எதுவும் இல்லாமல் அழியவிட்ட இனமாக இருக்கிறோம். மந்திரி மனை, யமுனா ஏரி மட்டுமே எஞ்சி கிடக்கின்றன.

இந்த நிலையில் எமது வாழ்வைச் சித்திரிக்கும், எமது பண்பாடுக் கோலங்களை பதிவுகளாக்கும் எம்மவர் நூல்களுக்கு ஆதரவு அளிப்பது மிகவும் முக்கியமான தாகும்.

குலசிங்கம் வசீகரன் அவர்களின் முன் முயற்சியுடன் பருத்தித்துறை நண்பர்கள் குழு முழு வீச்சுடன் ஆரம்பித்திருக்கும் எங்கட புத்தகங்கள் கண்காட்சியும் விற்பனையும் சிறப்பான முன்னுதாரண முயற்சியாகும்.

இலக்கியம், படைப்பு, நூல்கள் போன்றவை நாடு, மொழி, இனம் போன்ற எல்லைக்குள் முடங்காதவை என்பது உண்மைதான். எனவே தமிழ் நாடு உட்பட ஏனைய இடங்களில் வெளியாகும் நூல்களை வாங்குவதும், படிப்பதும், சேமிப்பதும் தவிர்க்க முடியாதவை என்பதை ஏற்றுக் கொள்ளும் அதே நேரம் எம்மவர்கள் புத்தகங்களை வாங்கிப் படித்து சேமிப்பது எமது தாயை மதித்துக் காப்பாற்றுவதற்கு நிகரானது என்பதைச் சொல்லியா தெரிய வேண்டும்.

ஜனவரி 24, 25, 26 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம், முற்றவெளியில் இடம்பெறவுள்ள "யாழ் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி 2010" இல், எம்மவர்களின் நூல்களுக்கான கண்காட்சியானது வெறும் விற்பனைக் கூடமல்ல. எங்கட எழுத்தாளர்கள் ஒருவருக்கு ஒருவர் அறிமுகமாகவும், சந்தித்துப் பேசவும் நூல்களை வாங்கவும் பரிமாறிக் கொள்ளவும் கிடைத்த அரிய சந்தர்ப்பமாகும்.

இதனை முழுமையாக பயன்படுத்தி கொள்வோம்.

எம்.கே.முருகானந்தன்



எங்கட புத்தகங்கள் கண்காட்சியும் விற்பனையும் என்பது தலைப்பாக இருந்தாலும் இந்த ஆரம்பம் எங்கள் எழுத்தாளர்களுக்குக் கிடைத்த மிகப்பெரும் வாய்ப்பாகும். இத்திட்டத்தை ஆரம்பத்தில் இருந்து செய்நேர்த்தியுடன் செயற்படுத்தி வரும் வசிகரன் அவர்களது வாசிப்பின் மீதான தீராத ஆர்வம் எம்மவர்களான ஒவ்வொரு எழுத்தாளரையும் அறிய வேண்டும் என்ற தேடல் எழுத்தாளர்களுக்குக் கிடைத்த பாக்கியமாகும். நாளாந்தம் முகநூலில் அவர் பதிவிட்டு வந்த எழுத்தாளர்களதும் நூல்களதும் அறிமுகங்கள் பெரும் உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் தந்தன. எங்களுக்குள் எத்தனை எழுத்தாளர்கள்! எத்தனை விதமான நூல்கள்!
இத்தனை நாளும் எல்லோரும் அறியாத நிலையில் இருந்த எழுத்தாளர்களை ஏனைய எழுத்தாளர்களுக்கும் வாசகர்களுக்கும் அறியத் தரும் இச்செயற்பாடானது தமிழ் சமூகத்தின் பாரியளவிலான எழுத்து வளர்ச்சியை வெளிப்படுத்தி நிற்கிறது.

இந்த அருமருந்தன்ன பணியை தூரநோக்கோடு ஆரம்பித்து செயற்படுத்தி வரும் வசிகரனுக்கு எழுத்தாளர்களும் வாசகர்களும் தாராளமாக முன்வந்து தொடர்ந்து ஒத்தாசைகளை வழங்குவோமாக. இது இடையறாத செயற்பாடாக நடைபெறல் வேண்டும். எம்மவர்களின் பாடுகளுக்கு நல்ல வாய்ப்புகளை வழங்கும் வசதிப்படுத்தல் இதனூடாகத் தொடரும் என்று நம்புகிறேன்.

எழுத்து காயத்தை ஆற்றும், காலத்தை மாற்றும். அந்த எழுத்துக்களை தன்னார்வத்தோடு தாங்கிச் செல்லத் துணிந்த இவரது பாதைகள் தோறும் இவர் விரும்பியவாறு பன்முகப்பட்ட எழுத்தாளர்கள் மேலும் வளரட்டும்.

வெற்றிச்செல்வி
20.01.2010



# தனபாலசிங்கம் ஜெயசீலன்

யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்த இவர் 1993ஆம் ஆண்டிலிருந்து கவிதைகளையும் அதிகமாக மரபுக் கவிதைகளையும் எழுதி வருகிறார். எழுதாத ஒரு கவிதை, புயல் மழைக்கு பின்னான பொழுது, கைகளுக்குள் சிக்காத காற்று, கனவுகளின் எல்லை ஆகிய இவரின் நான்கு கவிதை நூல்கள் வெளிவந்துள்ளன. விஞ்ஞானப் பட்டதாரியான இவர், விரிவுரையாளராகவும் ஆசிரியராகவும் உதவி அரசாங்க அதிபராகவும் பருத்தித்துறை பிரதேச செயலாளராகவும் கடமையாற்றினார். தற்போது யாழ்.மாநகர சபையின் ஆணையாளராவார். சனத்தொகை அபிவிருத்தித்துறையில் முதுமானிப்பட்டம் பெற்ற இவர் வானொலிகள், பத்திரிகைகள், சஞ்சிகைகளில் தொடர்ந்து எழுதிவருகிறார். கைகளுக்குள் சிக்காத காற்று 2004 ஆம் ஆண்டுக்கான உலகளாவிய தமிழின் சிறந்த படைப்புகளின் சிறந்த கவிதைத் தொகுதியாக தெரிவானது.



# வெற்றிச்செல்வி

மன்னார் அடம்பனை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர். இவரது நூல்கள், ஈழ விடுதலைக்கான இறுதிப்போரின் சாட்சியமாகவும் ஆவணமாகவும் முக்கியம் பெறுகின்றன. எந்தப் புனைவுகளுமின்றி போரையும் அந்தப் போரின் துயரத்தையும் துயரம் கடந்த பெரும் நம்பிக்கையையும் நூல்களாக்கி இருக்கிறார். இவரது பத்தாவது நூலாகிய 'குப்பி' 2019 இல் வெளியானது. போருக்குள் வாழ்ந்த மாந்தர்களின் உண்மைக் கதைகளை தொடர்ந்தும் எழுதிவருகிறார். நாவல், அனுபவக் கதைகள், கவிதைகள், சிறுகதைகள் ஆகிய நூல்களை வெளியிட்டுள்ளார். தனது நண்பர்களையும் எழுதத் தூண்டுவதோடு அவர்களது வாழ்வின் கதைகளையும் நூல்களாக வெளியிட்டு வருகிறார். மாற்றுத்திறனாளிகள் குறித்து அதிக சிரத்தையோடு செயற்படும் இவர் சமூகப்பணியாளராகவும் தொண்டாற்றி வருகிறார்.



## பரணீதரன்

இவர் பன்முக ஆளுமை கொண்டவர். படைப்பாளர், கட்டுரையாளர், கல்வியாளர், கலை இலக்கிய சஞ்சிகையின் ஆசிரியர், இசை நாடக நடிகர், நூல் வெளியீட்டாளர், ஈழத்து தமிழர்களுக்கான ஆவணகச் செயற்பாட்டாளர், கிரிக்கெட் வீரர் இவ்வாறாகப் பல ஆளுமைக்குரியவர்.



## ரஜிதா இராசரத்தினம்

யாழ்ப்பாணம் குடத்தனை மேற்கில் பிறந்தவர். "மணற் கும்பி" இவருடைய முதலாவது கவிதைத் தொகுப்பாகும். பசுமைச் சுவடுகள் அமைப்பினூடாக சூழலியல் சார் செயல்வாதங்களில் ஈடுபட்டு வருகின்றார்.



## வேலணையூர் ரஜிந்தன்

இவரது கவிதை நூல்களான பொற்கனவு, நிலா நாழிகை மற்றும் கட்டிடக் காடும் யுரேனியக் கதிரும் ஆகிய நூல்கள் இதுவரை வெளிவந்துள்ளன. நடிப்பு, பேச்சு, பட்டிமன்றம், கவியரங்கம், கவிதை எழுதுதல் போன்ற கலைத்துறைச் செயற்பாடுகளில் ஈடுபாடுள்ளவர். இவர் நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஸ்ட மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணியாற்றுகிறார். கல்விமானி கற்கைநெறி இறுதியாண்டு மாணவனாகவும் இருக்கிறார். இணைய வானொலியில் பகுதி நேர அறிவிப்பாளராகவும் உள்ளார். துறையூர் கலை இலக்கிய வட்டத்தின் தலைவராக இருந்தபோது இளம் படைப்பாளர்களின் ஆக்கங்கள் தாங்கிய தென்னங்கீற்று சஞ்சிகையையும் வெளியிட்டார். 2019 ஆம் ஆண்டுக்கான இளங்கலைஞர் விருது பெற்றுள்ளார்.

## சுவிஸ்
## மூர்த்தி மாஸ்ரர்



நாகேஸ் உருத்திரமூர்த்தி. மன்னார் அடம்பனில் பிறந்தார். சுவிஸில் வாழ்ந்தவர். புலம்பெயர் வாழ்வில் கணினி விஞ்ஞானி. ஆசிரியர், மொழிபெயர்ப்பாளர், கலைஞர், ஆலோசகர், பத்திரிகை விநியோகஸ்தர், சமூக சேவையாளர், விழா ஏற்பாட்டாளர், வானொலி நடத்துனர், தொலைக்காட்சி நிறுவனப் பங்காளர், பட்டிமன்ற பேச்சாளர், புத்தக வெளியீட்டாளர், மென் பொருள் வெளியீட்டாளர் என பல தளங்களில் செயற்பட்டவர். மீண்டும் ஊர் திரும்பிய இவர் மன்னாரில் “அடம்பன் பண்ணை” என்ற ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை நடத்தி வருகிறார்.

## சபாரெட்ணம்
## சுப்பிரமணியம்



நல்லூரைச் சேர்ந்த சுப்பிரமணியம் ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக வலயக்கல்விப் பணிப்பாளராக, மேலதிக மாகாணக் கலவிப்பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றுள்ளார்.



# முருகுப்பிள்ளை சிவனேசன்

வியாபாரிமூலையைச் சேர்ந்த முருகுப்பிள்ளை சிவனேசன் ஓய்வு நிலை வங்கி முகாமையாளர். 1991ஆம் ஆண்டு முதல் இலக்கியம், சமூக நலன் சார்ந்த விடயங்களில் இவருடைய கட்டுரைகள், சிறுகதைகள், குறுநாவல்கள் என்பன பல்வேறு பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. அவற்றுள் வெள்ளை ரோஜா முள் - மர்மத் தொடர் மிகவும் பிரபல்யமானது. இவை தவிர இவருடைய கம்பன் கடலமுதம், பாற்கடல் முயற்சியில், பால் வெளி போன்ற நூல்களும் வெளிவந்துள்ளன. பேராதனைப்பல்கலைக் கழகத்தின் விவசாய பீடத்தில் கல்விகற்றவர். பருத்தித்துறைக் ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவரான இவர் மக்கள் வங்கியில் 34 வருட சேவையைப் பூர்த்தி செய்தவர்.

## சிவகுருநாதன் சிறீறங்கன்



சிவகுருநாதன் சிறிறங்கன். இவர் உயர்தர கணக்கீட்டு பாட பட்டதாரி ஆசிரியர் ஆவார். உரும்பிராயில் பிறந்த இவர் 15 ஆண்டுகால கற்பித்தல் அனுபவத்தைக் கொண்டவர். சிறுவயது முதல் கவிதை, சிறுகதை, நாவல்கள் போன்றவற்றில் ஆர்வம் கொண்டவர். வலம்புரி பத்திரிகையில் சிறுகதைகள் எழுதி வருகிறார். அண்மையில் "சிவப்புக் கோடு" எனும் சிறுகதை தொகுப்பு வெளியிட்டுள்ளார். இவரது சிறுகதைகள் பெரும்பாலும் சமூகப் பிரச்சினைகளை மையமாகக் கொண்டவை.

## த.அஜந்தகுமார்



துன்னாலையைச் சேர்ந்த அஜந்தகுமார் ஈழத்து புலமைச் சூழலில் தனது பல்துறை சார்ந்த எழுத்துக்களால் நன்கு பரீட்சயமான இவர் படைப்பின் கதவுகள், நான் அவளுக்கு ஒரு கடலைப் பரிசளித்தேன், தனித்து தெரியும் திசை போன்ற நூல்களை எழுதியுள்ளார். கலைமாணி சிறப்பு தமிழ் பட்டத்தைப் பெற்றவர்.

## அகிலினி
### நந்தகுமார்



சிறுவயதிலிருந்தே வாசிப்பில் மிகுந்த ஆர்வம் கொண்ட அகிலினி குறிப்பாக ஆங்கில நூல்களை விரும்பி வாசிப்பார். யாழ்ப்பாணம், திருநெல்வேலியைச் சேர்ந்த இவர் தன்னுடைய 17 ஆவது வயதில் "A City Without Wall" என்ற ஆங்கிலக் கவிதை நூலை வெளியிட்டுள்ளார். மனதின் எதிரொலிகளையும் வாழ்க்கையின் விம்பங்களையும் சொற்களாகக் கோர்த்தெடுத்த ஒரு சிறிய ஆங்கிலக் கவிதைத் தொகுப்பே A City Without Walls.

## தர்மினி
### பத்மநாதன்



யாழவள், கலைப்பிரியை என்ற புனை பெயர்களில் எழுதிவரும் யாழ்.தர்மினி ஒரு சிரேஷ்ட ஊடகவியலாளர். இவர் ஊடகத்துறையில் முதுகலைமானிப் பட்டம் பெற்றவர் மட்டுமன்றி அரங்க செயற்பாட்டாளராகவும் உள்ளார். இவர் "எங்கட கதைதான்", "விபச்சாரி 80 ரூபா" ஆகிய நூல்களை எழுதியுள்ளார். முள்ளிவாய்க்காலுக்குப் பின்பும் ஈழத்தவரின் துயர்மிகு வாழ்வு தொடர்பாகவும். தற்போதைய சமூக நிலை பற்றியும் எழுதியுள்ளார்.



## மு.நற்குணதயாளன்

மு.தயாளன், கரவை தயாளன் என்ற புனை பெயர்களில் எழுதிவரும் மு.நற்குண தயாளன் 1970 ஆம் ஆண்டிலிருந்து தனது எழுத்துப்பணிளை தொடர்கிறார். ஆசிரியராகக் கடமையாற்றிய இவர் இதுவரை 26 ஆங்கில பாட நூல்களையும் 8 தமிழ் நூல்களையும் வெளியிட்டுள்ளார். முக்கியமான இவரது தமிழ் படைப்புக்களாவன, சில மனிதர்களும் சில நியாயங்களும் (நாவல்), புளியமரம் (சிறுகதை), ஒரு லண்டன் பொடியன் (சிறுகதை), மடிவேன் என்று நினைத்தாயா (கவிதை), எனது பேனாவிலிருந்து (தொகுப்பு), தயாளனின் குறும்பாக்கள் போன்றனவாகும்.



## வேல்சாரங்கன்

கோண்டாவிலைச் சேர்ந்த வேல் சாரங்கன் யாழ் போதானா வைத்தியசாலையில் வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றுகிறார். கவிதையை நேசிக்கும் இவர் மொழி பெயர்க்கப்பட்ட மௌனம் என்ற நூலை வெளியிட்டுள்ளார். உடற்பிணி போக்கும் மருத்துவர் தனது எழுத்துக்களினூடாக சமூகப் பிணியையும் போக்குபவராகவும் உள்ளார்.



## நெல்லை லதாங்கி

நெல்லை லதாங்கி என்ற புனைபெயரில் எழுதிவரும் ஆனந்தராணி நாகேந்திரன் வடமராட்சி கல்வி வலயத்தின் சங்கீத பாட ஆசிரிய ஆலோசகராகக் கடமையாற்றுகிறார். இவர் பாட்டி சொன்ன கதை, அன்னை சொல்லைத் தட்டாதே, செல்லப்பிராணிகள், அன்புடை நெஞ்சம், விழித்திருங்கள், மீண்டும் வசந்தம் போன்ற நூல்களை எழுதியுள்ளார். இவர் நடிப்புக்கான யூரி விருதினைப் பெற்றுக்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



## வேதா இலங்காதிலகம்

வானதி, கோவைக் கவி எனும் புனைபெயர்களில் சிறுவர், இளையோர் இலக்கியங்களை எழுதிவரும் வேதா இலங்காதிலகம் டென்மார்க்கில் 1987 ஆம் ஆண்டு தொடக்கம் வசிக்கிறார். ஓய்வு நிலையில் உள்ள முன் பள்ளி ஆசிரியரான இவர் அனுபவக் கட்டுரையான பெற்றோரியலில் சிற்றலைகள், பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான நூலான வேதாவின் ஆத்திசூடி, வேதாவின் மொழிகள் மற்றும் குறள் தாழிசை போன்ற நூல்களை ஆக்கியுள்ளார்.



# பி.மாணிக்கவாசகம்

பி.மாணிக்கவாசகம் - நெருக்கடி மிகுந்த இலங்கையின் ஆயுத முரண்பாட்டுத் தளம் உள்ளிட்ட சவால்கள் மிகுந்த சூழலில் நாற்பது வருடங்களுக்கு மேலாக துணிவோடு செயற்பட்டு வருகின்ற ஊடகவியலாளர். பிபிசி உள்ளிட்ட சர்வதேச செய்தி நிறுவனங்களின் செய்தி முகவராகப் பணியாற்றிய இவர் மக்களுக்குத் தெளிவூட்டும் வகையில் வீரகேசரியில் கூர்மையாக எழுதி வருகின்ற அரசியல் சமூகம்சார் கட்டுரைகள் முக்கியமானவை. அச்சுறுத்தல்கள் மிகுந்த 1998 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவராகப் பணியாற்றியவர். நம்பிக்கையோடு நிம்மதியை நாடும் யாழ்ப்பாணம், கால அதிர்வுகள், வாழத்துடிக்கும் வன்னி ஆகிய நூல்களை இவர் வெளியிட்டுள்ளார். மாற்றுத்திறனாளிகளின் வாழ்வியல் பற்றிய ஒரு நூல் விரைவில் வெளிவரவுள்ளது. செல்வரட்னம் சிறீதரன் என்ற புனைபெயரிலும் எழுதிவருகிறார். 40 ஆண்டுகால அனுபவமுடைய இவர் ஒரு சமூக ஆர்வலரும் ஆவார்.

## நடராசா
# சிறீரஞ்சன்



தீவகம் புளியங்கூடலைச் சேர்ந்தவர். இலங்கைச் சுங்கத் திணைக்களத்தில் தற்போது பணியாற்றும் இவர் கொழும்புப் பல்கலைக்கழக முன்னை நாள் விரிவுரையாளராவார். வணிகக் கல்விப் பின்புலத்தைக் கொண்ட இவர் எமது பாரம்பரிய விடயங்களை ஆவணப்படுத்துவது, அழியவிடாமல் பார்ப்பது, பராமரிப்பது, சந்தைப்படுத்துவது, பொருளாதார வலுக் கொடுப்பது என்றவாறான சிந்தனைகளுடன் செயற்படுபவர். "பொருளாதார மேம்பாடுச் சிந்தனைகள்", "புலம் பெயந்தவர்களின் பொருளாதரப் பங்களிப்புக்கள்", "குணநிதி வணிகச்சொல் விளக்க அகராதி", யாழ்ப்பாணத்தமிழ் அகராதி", "யாழ்ப்பாண வழக்குச்சொல் அகராதி - பகுதி ஐ" ஆகிய நூல்களின் ஆசிரியர். "குடும்பம்", "வாழுதல்", "சிறக்கச் சிறு கதைகள்" ஆகிய நூல்களின் தொகுப்பாசிரியரும் ஆவார்.



## வி.விஜயலாதன்
## (காங்கேயன்)

யாழ் காங்கேசன்துறையைச் சேர்ந்த இவர் 'மழலையும் மறக்குமா' என்ற கவிதை நூல் மற்றும் இறுவெட்டு மூலம் ஈழத்து இலக்கியப் பரப்பினுள் 2019இல் இணைந்துள்ளார். இக்கவிதை நூலில் முள்ளிவாய்க்கால் துயர் முதல் போர்க்கால அவலங்களை நிதர்சனமாக எடுத்துரைத்துள்ளார். பார்வைச் சவாலுடைய இவர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் சமூகவியல் துறையில் இறுதியாண்டு மாணவராவார். கல்வியில் மட்டுமல்லாது விளையாட்டு, கட்டுரை, நாடகம், பேச்சு மற்றும் நாடகத் துறையிலும் மிகுந்த ஈடுபாடுள்ளவர்.



## என்.சிவரூபன்

இவர் அளவெட்டியைச் சேர்ந்தவர். முன்னாள் விவசாய பொருளியல் ஆய்வாளராகக் கடமையாற்றிய என்.சிவரூபன் வாணிபம் என்ற சஞ்சிகையை வெளியிட்டு வருகின்றார்.



# தாட்சாயிணி

தாட்சாயிணி என்ற புனைபெயரில் எழுதும் சங்கத்தானை சாவகச்சேரியைச் சேர்ந்த பிரேமினி பொன்னம்பலம் 1990 களின் நடுப்பகுதியிலிருந்து கவிதை, சிறுகதை, கட்டுரை போன்ற துறைகளில் எழுதி வருகின்றார். 1992 பி.பி.சி இளம் தமிழ்க் கவிஞர் தேர்விலும்,1993 இல் கம்பன் கழக கவிதைப் போட்டியிலும் பரிசு பெற்றதனூடாக வெளியுலகிற்கு அறிமுகமாகியவர். கவிதையோடு ஆரம்பித்தாலும் சிறுகதைகளுக்காகவே தொடர்ந்து பரிசுகளும், பாராட்டுகளும் பெறறுள்ளார். வெளிவந்த நூல்களும் சிறுகதைகளே. கவிதை, சிறுகதை, கட்டுரை, சிறுவர் இலக்கியம், நாவல், அறிவியல் புனைகதை, என்பன இயங்கும் துறைகள். இதுவரை 5 சிறுகதைத் தொகுப்புக்களும் ஒரு ஆன்மீகக் கட்டுரைத்தொகுப்பும் வெளியாகியுள்ளன. . விஞ்ஞானப் பட்டதாரியும் பிராந்திய திட்டமிடலில் முதுமாணிப்பட்டமும் பெற்ற இவர் தற்போது சங்கானை பிரதேச செயலாளராகக் கடமையாற்றுகிறார்.

## அலெக்ஸ் பரந்தாமன்




புதுக்குடியிருப்பை வாழ்விடமாகக் கொண்ட அலெக்ஸ் பரந்தாமன் 90களில் இருந்து எழுதி வருபவர். பத்திரிகை ஊடகங்களிலும் பணியாற்றியுள்ளார். பல புனைபெயர்களில் போரியல் சார்ந்த இலக்கியங்களையும் சமூகம் சார்ந்த பத்தி எழுத்துக்களையும் பத்திரிகைகள் மற்றும் இலக்கிய சஞ்சிகைகளில் எழுதிவந்த இவர், இரண்டு சிறுகதைத் தொகுப்புகளையும் ஒரு கவிதைத் தொகுப்பையும் வெளியீடு செய்துள்ளார். அழுகைகள் நிரந்தரமில்லை, மரணவலிகள் தோற்றுப்போனவளின் வாக்குமூலம். ஆகிய நூல்கள் வெளிவந்துள்ளன.

## தர்சன் மன்மதராசா



ஆனைப்பந்தியைச் சேர்ந்த புங்கைமண் ம.தர்சன் 'அகதியின் வலி நிறைந்த பயணங்கள்' என்ற நூலை எழுதியுள்ளார். கவிதை தவிர்ந்து ஆலயப் பாடல்களையும் எழுதியுள்ளார்.



## எம்.கே.முருகானந்தம்


மருத்துவத்துறையில் பட்டம் பெற்ற இவர் ஒரு கலைஞன், படைப்பாளி, தரமான சிந்தனையாளர். மருத்துவம், நலவியல், சிறுகதை, கவிதைகள், பத்திரிகைகள், தொலைக்காட்சி என கடந்த 30 வருடங்களாகப் பயணித்திருந்தாலும் நலவியல் படைப்புக்களே அவரது முதல் தேர்வாக இருக்கின்றது. இதுவரை 13 நூல்கள்
வெளியிட்டுள்ளார்.தாயாகப்போகும் உங்களுக்கு, நீங்கள் நலமாக ஆகிய 2 நூல்களுக்கு இலங்கை தேசிய சாஹித்திய விருதுகள் கிடைத்துள்ளன.தாயாகப் போகும் உங்களுக்கு, எயிட்ஸ் ஆகிய இரு நூல்களும் சென்னையில் 4 தடைவைகள் பிரசுரமாகியுள்ளன.



## அ.யேசுராசா

குருநகர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இவரின் 9 நூல்கள் இதுவரை வெளி வந்துள்ளன. சிறுகதை, கவிதை, கவிதை மொழிபெயர்ப்பு, பத்தி எழுத்துக்கள், திரைப்படங்கள், இலக்கியங்களின் விமர்சனக் கட்டுரைகள் போன்ற பல ஆக்கங்களைப் படைத்துள்ளார். இவருடைய நினைவுக் குறிப்புகள் என்ற நூலில் தனது கருத்துக்களை வெளிப்படையாகக் கூறியுள்ளார்.

## செல்லம் அம்பலவாணர்



மறவன்புலோ சாவகச்சேரியைச் சேர்ந்த இவர் 'மறவன்புலோ' செல்லம் அம்பலவாணர் என்ற புனைபெயரில் எழுதுகிறார். கொழும்பை வதிவிடமாகக் கொண்ட இவர் தொழில் ரீதியில் தொலைத்தொடர்பு பொறியியலாளர். கொழும்பு பல்கலைக்கழக முதுமாணிப் பட்டதாரி. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் வானொலி நாடகக் கலைஞன். நடிகராகவும், நாடகப் பிரதி எழுதுபவராகவும் 1991இலிருந்து இன்றுவரை பங்களிப்புச் செய்து வருகின்றார். ஆறு புத்தகங்கள் வெளியிட்டுள்ளார். இவரது 'மன வைரம்' இலங்கை அரசின் 2019 ஆம் ஆண்டு அரச இலக்கிய விருது வழங்கலில் சிறந்த சுய நாடகத்திற்கான சாகித்திய விருது பெற்றது.

## பாலகிருஷ்ணன் இரகுபரன்



நாடகக் கலைஞர், கலை இலக்கிய ஆர்வலர், சுற்றுச் சூழல் மரபுரிமை எழுத்தாளர். பருத்தித்துறையூராம், கண்டல்காடுகள், வடமராட்சியில் நாட்டுக்கூத்துகள், கேட்டிருப்பாய் காற்றே (10 நாடகங்களின் தொகுப்பு) போன்ற நூல்களை வெளியிட்டுள்ளார்.

## மிதயா கானவி



மிதயா கானவி என்ற புனைபெயரில் எழுதும் தயாளலிங்கம் மிதிலா, 2009 ஆண்டு வரை மருத்துவப் போராளியாக இருந்தவர். தற்போது இரு ஆண்டுகளாக சுவிஸ் நாட்டில் வசிக்கின்றார். ஈழநாதம் பத்திரிகையில் மருத்துவ கட்டுரைகளை தொடர்ச்சியாக எழுதியிருக்கின்றார். 'கருணை நதி', 'மருத்துவ மடியில்' என்ற இரு நூல்களை எழுதியுள்ளார். தொடர்ந்து சமூகப் பணிகளில் இடைவிடாமல் செயலாற்றி வருகின்றார். போர்க்காலத்தின் உண்மைச் சம்பவங்களை தனது எழுத்து மூலம் வெளிப்படுத்துவதில் ஆர்வம் உள்ளவர்.

## முகில்நிலா



முகில்நிலா நகரதிட்டமிடல் பட்டதாரியான இவர் மணலாறை பூர்வீகமாகக் கொண்டவர். தொடர்ச்சியாக கவிதைகள், கட்டுரைகள்,சிறுகதைகள் என ஈழம் சார்ந்தும் சமூகம் சார்ந்தும் எழுதிவரும் இவர், ஒரு பரத கலாவித்தகருமாவார். 'பட்டது' என்ற கவிதை நூலை வெளியிட்டுள்ளார்.



# சிவலிங்கம் சிவசேகரம்

2011 பாடசாலைகளுக்கிடையிலான தேசிய கவிதைப்போட்டியில் பங்கு பற்றி 2ம் இடம் பெற்றார்.
குடத்தனை கிறிஸ்து நற்றூதுப் பணியகத்திலிருந்து வெளியான "கடுகு" சஞ்சிகையில் எழுதத்தொடங்கினார்.
இணையத்தளங்களிலும் உதயன், தினக்குரல், ஜீவநதி, காற்றுவெளி, நெய்தல், தாயகம், தளவாசல், வளரி ஆகிய இதழ்களிலும் எழுதிவருகிறார். 2017 இல் முதலாவது கவிதை தொகுதியும் 2019 இல் "குடத்தனையூர் மாதரசி" வரலாற்று நூலையும், "கிழக்கு முருகன் திருப்பொன்னூஞ்சல்" மற்றும் "கும்பிமணல் ஸ்ரீ முருகன் திருவூஞ்சல்" ஆகிய நூல்களையும் வெளியிட்டுள்ளார். 2017-2018 ம் ஆண்டுக்கான "கொடகே" தேசிய சாகித்ய விருது பெற்றவர்.
மட்டைவேலிக்குத்தாவும் மனசு என்பதுவும் அவருடைய நாவலே.

## மன்னார் அமுதன்



யோசப் அமுதன் டானியல் என்ற இயற்பெயர் கொண்ட இவர் மன்னார் தீவின் சின்னக்கடையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அன்னை யாவினும், அக்குரோணி போன்ற நூல்களை எழுதியுள்ள இவர் கிழக்கிலங்கையின் தடாகம் இலக்கிய வட்டம் வழங்கும் அகஸ்தியர் விருது, கலைத்தீபம் விருது மற்றும் தேசிய கவிஞர்கள் சம்மேளனம் வழங்கிய காவியஶ்ரீ விருதையும் தனது கவிதைகளுக்காகப் பெற்றுள்ளார்.

## தேவகாந்தன்



கனடாவில் வசிக்கும் இவர் நவீன இலக்கியம், யுத்தத்தின் முதலாம் அதிகாரம், ஆதித்தாய், கனவுச் சிறை, நுண்பொருள், நதிமேல் தனித்தலையும் சிறுபுள் போன்ற நூல்களை எழுதியுள்ளார். சிறுகதைகள், இலங்கைச் சமூகங்களுக்கிடையிலான முறுகல் நிலை மூண்டு வந்ததற்கான கதை, கட்டுரைகள் போன்ற விடயங்களில் கூடிய ஆர்வத்துடன் இலக்கியத்துறைக்கு பங்காற்றுகிறார்.



## சர்மிலா வினோதினி

இராப்பாடிகளின் நாட்குறிப்பு, மகளின் வாசம் கவிதை நூல்கள், மொட்டப் பனையும் முகமாலைக் காத்தும் கதை நூல் என்பவற்றை வெளியிட்டுள்ளார். யாழ். பல்கலைக்கழகத்தில் புவியியல் சிறப்புப் பட்டதாரி. சமூக உளவியலும் ஆற்றுப்படுத்தலும், ஊடக தொடர்பாடலும் அறிவிப்புத்துறைசார் நுட்பங்களும் ஆகிய துறைகளில் பட்டய பட்டங்களைப் பெற்றவர். கொழும்பு, ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் காட்டியலும் சுற்றுச்சூழல் முகாமைத்துவமும் துறையில் முது விஞ்ஞானமாணிப் பட்டம் பெற்றவர்.



## வேதநாயகம் தபேந்திரன்

ஆவணப்படுத்தல், எழுத்துகள் துறையில் ஆர்வமான இவர் 'யாழ்ப்பாண நினைவுகள்' என்ற நூலினை ஆக்கியுள்ளார். இவர் மாவட்ட சமூக சேவை உத்தியோத்தராகக் கடமையாற்றுகிறார்.



## விவேகானந்தனூர் சதீஸ்

செல்லையா சதீஸ்குமார் எனும் இயற்பெயர் கொண்ட இவர் கிளிநொச்சியைச் சேர்ந்தவர். விடியலைத் தேடும் இரவுகள், இரும்புக் கதவுக்குள் இருந்து,சிறையிலிருந்து சிங்களச் சகோதரனுக்கு, மனச்சிறையிலிருந்து ஆகிய கவிதை நூல்களை வெளியிட்டுள்ளார். இந்த நான்கு நூல்களும் இவரால் சிறையில் இருந்து எழுதி வெளியிடப்பட்டவை. ஆயுள் கைதியாக தீர்ப்பிடப்பட்ட இவர் கட்டுரை வடிவிலான நூலொன்றை எழுதி வெளியிடுவதற்கான வேலைகளில் உள்ளார். தொடர் வாசகராகவும் சமகால நிகழ்வுகளை கவனித்து எழுதி வருகிறார்.

## ஜெயந்தன்

முல்லைத்தீவைச் சேர்ந்த இவர் எனது பயணங்களில், நறுக்கென்று ஆகிய இரண்டு நூல்களை எழுதியுள்ளார். நோர்வேயில் ஆசிரியராகப் பணிபுரிகிறார்.



## அன்பழகி கஜேந்திரா

வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்ட கவிதாயினி அன்பழகி மன்னாரில் வசிக்கிறார். எழுதுகிறார். இணையம், தொலைக்காட்சி, அச்சு ஊடகங்களில் தனது படைப்புக்களை தொடர்ந்து வெளிப்படுத்துகிறார். முகநூலில் கவிதைப் போட்டியை நடாத்துகின்ற குழுமங்களில் 200 இற்கும் மேற்பட்ட சிறப்புச் சான்றிதழ்களும் கிராமிய விருது, இளங்கவி விருது, கவிச்சரம், கவிச்சாகரம் போன்ற விருதுகளைப் பெற்றுள்ளார். இவரின் கவிதைகள், அமுதப்பிரவாகம், உனக்குள் நீ போன்ற நூல்களாக வெளிவந்துள்ளன.



## சின்னராசா உதயகுமார்

யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சின்னராசா உதயகுமார் பத்திரிகைகள், இணையத்தளங்கள் வாயிலாக தனது கலைப்பணியை மேற்கொள்கிறார். சமரபாகு உதயகுமார் என்ற புனைபெயரில் 'தமிழினி' என்ற சிறுகதைத் தொகப்பினூடாக தனது பல்வேறுபட்ட மட்டங்களிலான சிந்தனைத்திறனை வாசகர்கள் மத்தியில் படரவிட்டுள்ளார்.



# தமிழ்நதி

தமிழ்நதி என்ற புனைபெயரில் தனது படைப்புக்களை வெளியிடும் கலைவாணி இராஜகுமாரன், நெளுக்குளம் வவுனியாவைச் சேர்ந்தவர். திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் யாழ்.பல்கலைக்கழக கலைத்துறைப் பட்டதாரியாவார். 1996 இல் இருந்து இதுவரை சூரியன் தனித்தலையும் பகல், இரவுகளில் பொழியும் துயரப் பனி, அதன் பிறகும் எஞ்சும், காலம் உறைந்த சட்டகம், நான்கு கவிதைத் தொகுப்புகள், கானல்வரி குறுநாவல், ஈழம் :தேவதைகளும் கைவிட்ட தேசம் - கட்டுரைத் தொகுப்பு, நந்தகுமாரனுக்கு மாதங்கி எழுதியது, மாயக்குதிரை, சிறுகதைத் தொகுப்புகள், பார்த்தீனியம் - நாவல் என்பன வெளியாகியுள்ளன. ஈழம் சார்ந்து எழுதுபவராகவும் பெண் எழுத்தாளராகவும் இவரது எழுத்துக்கள் பெருமளவில் பேசப்பட்டு வருகின்றன.



## நா.யோகேந்திரநாதன்

நீர்வேலியைச் சேர்ந்த யோகேந்திரன் என்பவர் சந்திர சேகர ஆசாத், யோத நாராயணன் போன்ற புனை பெயர்களில் எழுதி வருகின்றார். 1974 ஆம் ஆண்டு தனது இலக்கியப்பணியை ஆரம்பித்த இவர் இடிபடும் கோட்டைகள், நீந்திக்கடந்த நெருப்பாறு 1,2,3 போன்ற நூல்களை எழுதியுளள்ளார். இவர் சிறுகதை, கவிதை, அரசியல் ஆய்வு, மேடைநாடகம், வானொலி நாடகம், நாட்டுக்கூத்து போன்ற துறைகளில் செயற்பட்டுவருகிறார். தொலைநோக்கு என்ற சிறுகதைத் தொகுப்பையும் வெளியிட்டுள்ளார்.



## மன்னார் பெனில்

மன்னார் கவிஞர் பிரான்சிஸ் பெனில்டஸ் 'ஈர நிலத்தை எதிர்பார்த்து' என்ற நூலை எழுதியுள்ளார். எமது நாட்டின் சூழலையும் மக்களின் வலிகளையும் ஆதங்கங்களையும் வெளிப்படுத்தும் முகமாக இவருடைய இந்த நூல் அமைந்திருக்கின்றது. அத்தோடு முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டு மக்களோடு மக்களாக வடுக்களுடன் வலிகளுடனும் வாழ்ந்துவரும் இவருடைய நூல் வரவேற்கத்தக்கதாகும்.

நிதனி பிரபு

ரோசி கஜன்





இவர்கள் இருவரும் வவுனியா மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். திருமணத்தின் பின்னர் நெதர்லாந்து, ஜேர்மனியில் வசிப்பவர்கள். இருவரும் சிறுகதைகள்,கட்டுரைகள் நாவல்கள் எழுதுபவர்கள். sendhuram.com எனும் வலைத்தளத்தையும் amazon இல் வெளியாகும் "செந்தூரம்" மின்னிதழையும் வெற்றிகரமாக நடத்தி வருகின்றனர். இவர்களின் நாவல்கள் தொடர்ந்து இந்தியாவில் வெளிவந்துகொண்டிருந்தாலும், இருவரும் இணைந்து "உதிரிப்பூக்கள்" எனும் தங்களின் சிறுகதைகள் அடங்கிய நூலை இலங்கையில் அச்சிட்டுள்ளார்கள்.



## தமிழ்உதயா

உதயகுமாரி விவேகானந்தராஜா மல்லாவியைப் பிறப்பிடமாகக் கொண்ட உதயகுமாரி வவுனியா மாவட்ட கல்விப்பணிப்பாளராகக் கடைமையாற்றியவர். தற்போது லண்டனில் வசித்துவரும் இவர் 1984 ஆம் ஆண்டிலிருந்து தமிழ் உதயாவாக எழுதிக்கொண்டிருக்கிறார். அகாலத்தின் நித்தியக் கடல், ஆண் நிற வெயில், எனக்கு பறவை நிழல், நீரோவின் இசைக் குறிப்புகள், பாரோவின் அறையில் ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.



## ச.தர்மதாஸ்

உடுவில் சுன்னாகத்தைச் சேர்ந்த தர்மதாஸ், செல்வன் என்ற புனைபெயரில் 'காலவரைக் காட்டூன்கள்' என்ற நூலை வெளியிட்டுள்ளார். இவர் ஸ்ரீபாத தேசிய கல்வியற் கல்லூரியில் விரிவுரையாளராகக் கடமையாற்றுகிறார்.



# ஸ்ரீரஞ்சனி

தெல்லிப்பழையைச் சேர்ந்த ஸ்ரீரஞ்சனி தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, பேராதனைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் போன்ற கல்வி நிறுவனங்களில் கற்று இலங்கையில் விஞ்ஞான ஆசிரியராகக் கடைமையாற்றியவர். தற்போது தமிழ் ஆசிரியராக Toronto District School Board இலும் கனடிய அங்கீகாரம் பெற்ற மொழிபெயர்ப்பாளராகவும் கடைமையாற்றுகிறார். 1984 ஆம் ஆண்டு 'மனக் கோலம்' என்ற சிறுகதை மூலம் எழுத்துலகத்துக்குள் பிரவேசித்தார். தமிழ் படிப்போம், பகுதி 1, பகுதி 2, 'நான் நிழலானால்' சிறுகதைத் தொகுதி, தமிழ் ஓர் அறிமுகம், தமிழ் – ஆரம்பநிலை, தமிழ் – மேம்பட்டநிலை, உதிர்தலில்லை இனி – சிறுகதைத் தொகுதி, பின் தொடரும் குரல் – கட்டுரைத் தொகுதி சிந்துவின் தைப் பொங்கல் போன்ற நூல்களை எழுதியுள்ளார். இவருடைய 'உதிர்தலில்லை இனி' நூல் கொடகே சாகித்திய விருது, 2019 இனைப்பெற்றது.



## வ.வடிவழகையன்

காரைநகரைச் சேர்ந்த இவர் 'முகில் எனக்கு துகில் ஆகும்' என்ற கவிதை நூலை எழுதியுள்ளார். மரபு சார்ந்தும் மரபு சாராமலும் கவிதைகளை எழுதிக்கொண்டிருக்கும் இவர் சமகால சமூகம்சார் விடயங்களை பாடுபொருட்களாக கொள்கின்றார். தற்போது கிராம அலுவலகராகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் இவர் 2018 ஆம் ஆண்டுக்கான சாகித்திய மண்டல விருதைப் பெற்றுள்ளார்.



## கண்ணன் கண்ணராசன்

கச்சாய் கொடிகாமத்தைச் சேர்ந்த கண்ணன் கண்ணராசன் ஜேர்மன் நாட்டில் வாழ்ந்தாலும் தன் மண்வாசைன மணக்காமல் பல படைப்புக்களைச் செய்துள்ளார். அவற்றுள் 'கிறுக்கிப் போட்ட காகிதங்கள்', 'கற்பினையில்லா ஒப்பனைகள்' மற்றும் 'சிந்தனைத் திடலில் சிதறிய துகள்கள்' போன்ற நூல்கள் குறிப்பிடத்தக்கவை.

## செல்வி சிதம்பரபாரதி திருச்செந்திநாதன்



இவர் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் அவர்களது புதல்வியாவார். அவர் வழி வாசிப்பில் ஈடுபாடும் இலக்கிய கலந்துரையாடல்களில் செவிமடுப்பு ஆர்வமும் கொண்டிருந்தவர். எழுத்து ஆர்வம் கொண்டு எழுதிய முதல் தொகுதி விடைபெறல் என்னும் சிறுகதைத் தொகுப்பாகும். இவர் ஊவா வெல்லஸ்ச பல்கலைக்கழக தேயிலைத் தொழிநுட்பமும் பெறுமதி சேர்ப்பும் (டீளுஉ.வுநய. வுநஉா) கற்கைநெறி இறுதியாண்டு மாணவியாவார்.

## சு.குணேஸ்வரன்



மயிலிட்டியைச் சேர்ந்த இவர் துவாரசன் என்ற புனைபெயரில் எழுதிவருகிறரர். இவர் உள்ளும் வெளியும், அலையும் உலையும், இலக்கியத்தில் சமூகம் போன்ற நூல்களை எழுதியுள்ளார். முது தத்துவமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்ட இவர் புலம்பெயர் படைப்புகள் குறித்த தகவல் பெட்டகமாகவே தன்னை வளர்த்துவருகிறார். கவிதை, கட்டுரை, ஆய்வு போன்ற துறைகளில் ஈடுபட்டு வருகின்றார்.



# வல்வை.ந.அனந்தராஜ்

வடமராட்சியின் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த வல்வை.ந.அனந்தராஜ், வல்வை ஆனந்தன், ஆனந்தி என்ற புனை பெயர்களில் எழுதுகிறார். சிறுகதைகள், கட்டுரைகள், விவரணச் சித்திரங்கள், வரலாற்றுச் சம்பவங்கள் போன்ற ஆக்கங்களைப் பத்திரிகைகள், சஞ்சிகைகளிலும், நூல்களாகவும் கடந்த 40 வருடங்களுக்கு மேலாக எழுதி வெளியிட்டு வருகின்றார். இவரது ஆக்கங்கள் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியாகவும் பரிசுகளையும், விருதுகளையும் பெற்றிருக்கின்றன. சிறுகதைகள், நாவல்கள் வரலாற்றுக் கட்டுரைகள், முகாமைத்துவம், கல்வி நிர்வாகம், நாட்டார் இலக்கியங்கள், தமிழ் மக்களின் துன்பியல் வாழ்வை விளக்கும் விவரணச் சித்திரங்கள், தமிழர்களின் வரலாற்று முதுசங்கள், அறிவியல், ஆலயங்களின் வரலாறுகள், நூலகவியல் என பல்துறை சார்ந்த 24 வரையான நூல்களை வெளியிட்டிருக்கின்றார். இவற்றில் முகாமைத்துவ நுட்பங்கள் நூலுக்காக வடக்கு கிழக்கு மாகாண சாகித்திய விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.



# கந்தர்மடம் அஜந்தன்

அரியராசா அஜந்தன் கந்தர்மடத்தை சொந்த இடமாகவும் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்டவர். பன்னாட்டு நிறுவனத்தில் உளவியல், கல்வி, சிறுவர் அபிவிருத்தி தொடர்பாக பணியாற்றி வருபவர். 2009 காலப்பகுதியிலிருந்து கவிதை, கட்டுரை, சிறுகதைகளை எழுதிவருகிறார். "மனமெனும் கூடு" என்ற கவிதைத் தொகுப்பு தனது பென்சில் ஓவியங்களுடன் முதலாவது புத்தகமாக 2016இல் வெளிவந்தது. இவரது கவிதைகள், சிறுகதைகள், உளவியல்சார் கட்டுரைகள் என்பன உதயன்- சூரியகாந்தியிலும், சுடர் ஒளியிலும் பிரசுரமாகியிருக்கின்றன. "நான்" உளவியல் சஞ்சிகை, ஜீவநதி, கலைமுகம் போன்ற சஞ்சிகைகளிலும் ஆக்கங்களை எழுதி வருகின்றார். சமகால நிகழ்வுகளையும், போரின் அவலங்களையும், மக்களின் இன்னல்களையுமே அதிகம் அவரது படைப்புக்கள் பிரதிபலிக்கின்றன. உளவியல், சிறுவர் அபிவிருத்திசார் கட்டுரைகளை அனுபவ வாயிலாக வாசகர்களோடு உதயன் சூரியகாந்தியூடாக பகிர்ந்தும் வருகின்றார்.



# நல்லை க.கண்ணதாஸ்

கணேசசுந்தரம் கண்ணதாஸ் என்ற இயற்பெயரைக் கொண்ட இவர் யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்டவர். ஆற்றுகை, ஆக்கம், ஆசிரியத்துவத் திறன்களைக் கொண்டவர். முப்பத்தைந்து தாளங்களில் தனியாவர்த்தனம், பஞ்ச கதிகள் ஆகிய இரு நூல்களை வெளியிட்டுள்ளார். நுண்கலைமாணி, மிருதங்க கலாவித்தகர் ஆகிய படங்களைப் பெற்றுள்ளார். இலங்கையின் முதல்தர மிருதங்க வித்துவானாக அறியப் பட்ட இவர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் நுண்கலைப்பிரிவின் மிருதங்க போதனாசிரியராக இருந்தார். இசைப் பாரம்பரியத்தைக் கொண்ட இவர் இசைத்துறை சார்ந்த பல ஆக்கபூர்வமான அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டவர்.

## செல்வநாயகம் அருட்குமரன்

தேசவழமைச் சட்டம் என்ற நூலை எழுதியுள்ள செல்வநாயகம் அருட்குமரன் இலங்கை நிதியமைச்சின் கீழ் இருந்த சமூகப் பாதுகாப்புச் சபையில் உதவிப் பொது முகாமையாளராக கடமை புரிந்தவர். பத்திரிகைகள் மற்றும் இணையத்தளங்களில் அரசியல் கட்டுரைகளையும் அரச உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை மாதிரி வினாக்களையும் வெளியிட்டுவருகின்றார்.



## ந.கண்ணதாஸ்

வேலணையைச் சேர்ந்த இலக்கிய ஆர்வலரான கண்ணதாஸ் தனியார் கல்வி நிலைய கணித விஞ்ஞான ஆசிரியர் மட்டுமல்லாது ஒரு இலக்கிய ஆர்வலரும். இவரது நூல்களான 'மலரும் மலர்கள்' (சிறுகதை), 'துளிர்விடும் அரும்பு' (கவிதை) ஆகிய நூல்களை வெளியிட்டுள்ளார். 'காலச் சக்கரம்' மற்றும் 'கனவு' போன்ற குறும்படங்களையும் தயாரித்துள்ளார்.



## மார்க்கண்டு சிவசோதி

மா.சிவசோதி கரவெட்டி மேற்கை பிறப்பிடமாகவும் கலப்பணாவத்தை தும்பளை, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்டவர் இவரது பாடசாலைக் கல்வியை யா/ மாணிக்கவாசகர் வித்தியாலயம். யா/விக்னேஸ்வராக்கல்லூரி கரெவட்டியிலும் கற்றவர். ஆசிரியராக விநாயகபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை. துணுக்காயில் பணிபுரிகின்றார். 2001 முதல் கவிதை , சிறுகதை என்பன எழுதிவருகின்றார். இவர் இரு நூல்களை வெளியீடு செய்துள்ளார். தற்போது ஜீவநதி, வலம்புரி, வாரமலர் போன்றவற்றில் எழுதிவருகின்றார்.




## வானம்பாடி

போர்க்கால வாழ்வியல் பதிவுகளாக வந்திருக்கும் பாகம் 1 பாகம் 2 ஆகியவை மாற்றுத் திறனாளிகள் தம் அனுபவங்களைப் பகிர்வதாக அமைந்துள்ளன. இவை தேசிய மட்டத்தில் பதிவு செய்யப்பட்ட மாற்றுத் திறனாளிகள் மாதர் அமைப்பின் குருவி வெளியீடாகும். ஈழ விடுதலைப் போராட்டப் பாதையின் கனதியான நினைவுகளையும் வாழ்வனுபவங்களையும் கொண்ட இவை காலத்தின் கதைகளாக வரலாற்றில் இடம் பெறுகின்றன.



## செபமாலை
## பெனடிக்ரா

பட்டதாரி ஆசிரியையான இவர் 16 ஆண்டுகால ஆசிரியர் அனுபவம் கொண்டவர். பாடசாலை மாணவர்களுக்கான கலை, கலாசாரப் போட்டிகளிலும் கலை நிகழ்ச்சிகளிலும் தாராளமான பங்களிப்பை வழங்கி வருகிறார். மேடை நாடகங்கள், சிறுவர் நாடகங்கள், சிறுகதைகள் (வானம்பாடி 1,2), கட்டுரைகள், போட்டிக்கான பேச்சுகள், மெல்லிசைப் பாடல்கள், சிறுவர் பாடல்கள் என்பவற்றை தொடர்ச்சியாக எழுதி வருகின்றார். பாடகரான இவர் தற்போது தொழில்சார் கற்கையை சங்கீதத் துறையில் தொடர்கிறார். பார்வை சவாலுடைய மாற்றுத்திறனாளியாகிய இவர் விருதுகளையும் பரிசில்களையும் பெற்றுள்ளார்.

## மாதவி
## உமாசுதாசர்மா

கோண்டாவிலைச் சேர்ந்த இவர் அவளும் நானும் என்ற கவிதைத் தொகுப்பை வெளியிட்டுள்ளார். இவர் கவிதை மற்றும் சிறுகதை எழுதுவதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்.

## வீரசிங்கம் பிரதீபன்

பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரியான பிரதீபன் தனது இலக்கியப் பயணத்தை ஆசிரியத் தொழிலோடு ஆரம்பித்தார். இதுவரை 6 நூல்களை வெளியிட்டுள்ளார். தற்போது கலாச்சார உத்தியோகத்தராகக் கடைமையாற்றும் இவர் கவிதை, இலக்கியம், மரபுக்கவிதைகள் போன்றவற்றில் ஆழ்ந்த அனுபவம் உடையவர். இவரது 'சிறுவர் சிந்தனைத் தமிழ்' என்ற சிறுவர் கவிதைத் தொகுதி வெளிவந்துள்ளது. இவர் ஓர் நாடக இலக்கிய கர்த்தாவாகவும் நவீனத்துவமும் மரபு வழியும் கலந்த இலக்கியப் பணிகளைச் செய்துவருகிறார்.

## மாயன் (ஸ்ரீஇராமநாதன்)



இவர் சிறையிலிருந்து 'மடல்கள்' என்ற கவிதைத் தொகுப்பையும் 'அவனும் அதுவும்' என்ற நூலையும் வெளியிட்டுள்ளார். இவருடைய கவிதைத் தொகுப்பானது காலங்கள் சென்றும் தமிழர்களின் வாழ்வின் வடுக்களை நினைவுபடுத்திக் கொள்ளும் சுவடுகளாகக் காணப்படுகின்றன.



# வி.மைக்கல் கொலின்

திருகோணமலையை பிறப்பிடமாகவும் மட்டக்களப்பை வசிப்பிடமாகவும் கொண்ட வி. மைக்கேல் கொலின் தனது பாடசாலைக் காலங்களில் இருந்தே எழுதி வருகிறார். 1985 தொடக்கம் 1995 வரை மட்டக்களப்பிலிருந்து தாகம் எனும் சஞ்சிகையை வெளியிட்ட இவர் தாகம் பதிப்பகம் மூலமாக பல நூல்களை வெளிக்கொணர்ந்து உள்ளார் . 1995 ஆம் ஆண்டு என் பிரியமான ராஜகுமாரிக்கு எனும் கவிதை நூலினை வெளியிட்டார். மகுடம் எனும் கலை இலக்கிய காலாண்டு இதழ் ஒன்றினை நடாத்தி வரும் இவர் அத்னூடாக இதுவரை 30-க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளார். 2018 ஆம் ஆண்டில் பரசுராம பூமி எனும் சிறுகதைத் தொகுதியை வெளியிட்ட இவர் அந்த தொகுதிக்காக கிழக்கு மாகாண சாஹித்திய விருதை பெற்றுக் கொண்டார்.

## சிலந்திவலை
## (கிறுக்கி ஆதிரா)

ஆரியாலையைச் சேர்ந்த நிரோஜினி பரமேஸ்வரன் என்ற இயற்பெயரைக் கொண்ட இவர் 'இவள் கிறுக்கி' என்ற கவிதைத் தொகுப்பை வெளியிட்டுள்ளார். இவர் தனது உள்ளப் பரப்பில் துளிர்விட்ட உணர்வுகளை, வலிகளை, சுமைகளை, தான் கண்ட காட்சிகளை கவிதைகளாக எழுதியுள்ளார்.

## இதயராசன்

தெகிவளையைச் சேர்ந்த இவர் முரண்பாடுகள், நானும் என் தேவதையும் போன்ற நூல்களை எழுதியுள்ளார். ஆரம்பகால இடதுசாரி இயக்கத்தில் இணைந்து கொண்ட இவர் ஒரு மாக்ஸியவாதி. ஆசிரியராகவும் விரிவுரையாளராகவும் இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரியாகவும் சேவையாற்றி அண்மையில் ஓய்வு பெற்றுள்ளார்.



# நெடுந்தீவு முகிலன்

நெடுந்தீவை பிறப்பிடமாக கொண்ட இவரின் முழுப்பெயர் விசுவலிங்கம் முகிலன். கவிஞர், இயக்குனர், பாடலாசிரியர் என பல்துறை படைப்பாளியாக விளங்கும் இவர் அரச இலக்கிய விருதையும், AAA MOVIES - சிறந்த இயக்குனருக்கான விருதையும் பெற்றுள்ளார். இவரால் வெளியிடப்பட்ட நூல்கள் மனத்திரை மேகங்கள், கிறுக்கி,சாடிகள் கேட்கும் விருட்சங்கள், கறுப்பு வானம், அகதியின் முகம், நீ விளையாடுவாய் தானே நான் பொம்மையாகிறேன். கடவுளின் சயனத்தை கலைக்கும் மணியோசை, வெளியே புன்னகை அரசிஉ_ள்ளே கண்ணீருக்கடிமை. பயணிகள் கவனத்திற்கு, கனவுகளின் வாசகன். இவர் இயக்கிய குறும்படங்கள் தண்ணீர், தொட்டி, சாம்பல், கொலை, ஊமல், பால்காரன், கறல், சகோதரிகள் கவனத்திற்கு, கல்யாணச் சந்தை ஆகியனவும் குறிப்பிடத்தக்கன. மேலும் முப்பதிற்கும் அதிகமான பாடல்கள் எழுதி இயக்கியுள்ளார்.

## பண்டிதர்
## வீ.பராந்தாமன்



பருத்தித்துறையைச் சேர்ந்த இவர் தமிழர் உறவுமுறை சொல்வழக்கு அகராதி என்ற நூலை வெளியிட்டுள்ளார். தமிழரால் கைவிடப்பட்டுவரும் குடும்ப உறவுமுறைப் பெயர்வழக்குகள் பேணப்படுவதன் மூலம் ஒற்றுமையும் பண்பாடும் செழித்து வளர வேண்டும் என்ற நோக்கில் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

## ந.இரவீந்திரன்

இலங்கையின் பொதுவுடமை இயங்கங்களில் நீண்டகாலமாக பங்குபெற்றுவரும் ஒரு செயற்பாட்டாளர். சாதியமும் சமூக மாற்றமும், இலங்கைத் திணை அரசியலில் வர்த்தகப் போராட்டம் என்ற நூல்களை எழுதியுள்ளார்.

## வைரமுத்து கஜேந்திரன்

ஊர்காவற்துறையை பிறப்பிடமாகவும் மன்னாரில் வசிக்கும் இவர் மறுபிறப்பு (சிறுகதை), துடிக்கும் விழிகள் (கவிதை) ஆகிய நூல்களை எழுதியுள்ளார். இவர் ஒரு கவிஞர், ஊடகவியலாளர், எழுத்தாளர், குறும்பட இயக்குனர் ஆவார்.

## வேலணையூர் தாஸ்

கொழும்பத்துறையில் வசிக்கும் இவர் மழைக்காலக் குறிப்புகள், இரகசியத்தின் நாக்குகள், காற்றுவெளியிடையே, ஒரு வாசகனின் பிரதிகள் போன்ற நூல்களை எழுதியுள்ளார். இவர் தமிழ் ஆசிரியர். இவர் கவியரங்கம், பட்டிமன்றம் போன்ற வெகுசன அரங்குகளுடன் தொடர்புடையவர்.

## மலரன்னை

அற்புதராணி காசிலிங்கம் என்ற இயற்பெயரைக் கொண்ட இவர் மலரன்னை என்ற புனைபெயரில் எழுதிவரும் இவர் மலைச்சாரலின் தூவல், மௌனத்தின் சிறகுகள், அப்பாவின் தோட்டம், பாலைவனத்தின் பூ'பங்கள், காகிதப்படகு போன்ற நூல்களை எழுதியுள்ளார். இவர் தனது வாழ்வியல் அனுபவங்கள் ஊடாகப் பெற்ற அனுபவங்களை சமூகததின் மீதான பார்வைகளை தன் படைப்புக்கள் வாயிலாக வெளிப்படுத்திவருகிறார்.

## பிறேமா
## எழில்



இவர் ஒரு ஆற்றுகையாளராவும் இருந்து நொந்து வெந்த மக்கள் மத்தியில் விழிப்புணர்வு தொடர்பான விவாத நாடகங்களை குழுவாக இணைந்து நடத்தியும் வருகிறார். எழுத்து துறையில் அண்மையில் காலடி வைத்துளதன் பயனே கன்னிப்படைப்பான 'உருக்கி வார்த்த உணர்வுகள்'. தனது கவிதைகளில் போரியலில் பட்ட வேதனைகள், சந்தித்த மனிதர்கள், சமுதாயப் பிறழ்வுகளைக் கருப்பொருளாக சாடியுள்ளார்.

## வ.ந.கிரிதரன்

தற்போது கனடாவில் வாழ்ந்துவரும் வ.ந.கிரிதரன் மொரட்டுவப் பல்கலைக்கழக கட்டடக்கலை பட்டதாரி. மண்ணின் குரல், அமெரிக்கா உட்பட இதுவரை 7 நூல்களை எழுதியுள்ளார். இவரது சிறுகதைகள், கவிதைகள் சிங்கள மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

## புலோலியூர் ஆ.இரத்தினவேல்



ஈழத்து இலக்கிய உலகில் எழுத்தாளராக பதிப்பாளராக ஊடக முகாமையாளராக நன்கு அறியப்பட்ட இவர் இதுவரை 104 நூல்களை பதிப்பிட்டு வெளியிட்டுள்ளார். புலவொலி என்ற கட்டுரைத் தொகுப்பை எழுதியுள்ளார்.

## யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

மூத்த பெண் படைப்பாளர்களில் ஒருவரான திருமதி யோகேஸ்வரி கோப்பாயைச் சேர்ந்தவர். மக்கள் வங்கி முகாமையாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். யாழ் இலக்கிய வட்டச் செயலாளராகவும் சிறுகதை, கட்டுரை, பெண்ணியம் சார்ந்த விடயங்கள் தொடர்பான ஆக்கங்களைப் படைத்துள்ளார். இதுவரை 15 இற்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளார். கலாபூ'ணம், யாழ்முத்து, நாவேந்தன் போன்ற விருதுகளையும் பெற்றுள்ளார்.

## திருமதி குயீன் ஜெஸிலி கலாமணி



பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைப்பட்டத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழில் முதுகலைமாணிப் பட்டத்தையும் பெற்றவர் இவர் ஆசிரியராகக் கடமையாற்றுகிறார். நாடகமும் அரங்கியலும் பொருளியல் ஆகிய பாடங்களை உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு கற்பித்து வருகிறார். ஈழத்து இசை நாடக மரபு வளர்ச்சியில் அண்ணாவியார் எஸ்.தம்பையா என்ற நூல் இவரால் வெளியிடப்பட்டது.



# கலாநிதி த.கலைமணி

பௌதீகச் சிறப்புப் பட்டம் பெற்ற விஞ்ஞானப் பட்டதாரியாவார். பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் பௌதீகவியல் விரிவுரையாளராகவும் யாழ் பத்திரிசியார் கல்லூரியில் ஆசிரியராகவும் கடமையாற்றிய பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளராகக் கடமையாற்றுகிறார். அவுஸ்திரேலிய பல்கலைக்கழகத்தில் கல்வி முதுமானிப்பட்டத்தைப் பெற்றதுடன் தொடர்ந்து கல்வியல் துறையில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். ஆசிரியர் பாடநெறிக்கான பல்வேறு பாடங்களையும் கற்பித்துவரும் இவர் கவிதை, கட்டுரை, நாடகம், சிறுகதை, விமர்சனம் என இலக்கியத்தின் பல்வகைமைகளிலும் பரிச்சயமுடையவர். இசைநாடக அண்ணாவியாராகவும் நடிகராகவும் திகழ்கிறார். 3 சிறுகதைத் தொகுப்பு, 5 கட்டரைத் தாகுப்பு,1 கவிதைத் தொகுப்பு, 3 நாடகத் தொகுப்பு, 2 கல்வியியற் கட்டுரைத் தொகுப்பு இவரால் வெளியீடு செய்யப்பட்டுள்ளன.

# கோவை நந்தன்

கழுகு நிழல் என்ற நூலின் ஆசிரியரான இவர் கோப்பாய், யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்டவர். இவரது இயற்பெயர் ஆறுமுகம் நற்குணாநந்தன்.

சிறுவயதில் இருந்தே அரசியல் ஊடாட்டம் கொண்ட இவர் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க சமூகப் போராளியாக விளங்கினார். ஆரம்ப கால போராட்ட அமைப்புகளில் பங்களிப்புகள் வழங்கிய இவர் அரசியல் விமர்சகராகவும் விளங்கினார்.
பட்டிமன்ற பேச்சாளர் என்று குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய வாதத்திறன் கொண்ட இவர், பத்திரிகைகள், சஞ்சிகைகளில் சமூகப் பொறுப்புணர்வோடு எழுதிவந்தார். நீண்ட காலமாக வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறார்.

## கந்தசாமி முத்துராஜா

கந்தசாமி முத்துராஜா
இலங்கையின் தபால் அதிபராகப்
பணிசெய்தவர் முதுமாணிப்
பட்டதாரி, எழுத்தாளர், கவிஞர்,
அரங்கக் கலைஞர், நாவலாசிரியர்
என பல்வகைமை ஆற்றலுள்ளவர்.
தற்போது ரொறன்டோ கனடாவில்
வசிக்கிறார். தேசியப்பற்றும்
மொழியுணர்வும் சமூக அக்கறையும்
கொண்டுள்ள புலம்பெயர்
இலக்கியத் தடத்தில்
இயங்குகிறார்.

## ராஜாஜி ராஜகோபாலன்



பருத்தித்துறையை பிறப்பிடமாகக்
கொண்ட இவர் சட்டமாணிப் பட்டம்
பெற்ற இவர், இலங்கை சட்டக்
கல்லூரியில் சட்டத் தரணிப்
பயிற்சியும் பெற்ற இவர் கனடாவில்
வாழ்கிறார். எழுபதுகளில் இருந்து
தமிழ் இலக்கிய ஈடுபாடு கொண்ட
இவர் ஒரு வழிப் போக்கனின்
வாக்குமூலம் எனும் கவிதைத்
தொகுப்பை 2014 இல்
வெளியிட்டுள்ளார்.



## சிவ.ஆரூரன்

சிவ.ஆரூரன் பொறியில் சிறப்புப் பட்டம் பெற்றவர். அண்மையில் ஒரு நாவலையும் ஒரு சிறுகதைத் தொகுதியையும் படைத்துள்ளார். இவரின் யாழிசை நாவல் இலங்கை அரசின் சாகித்திய மண்டல பரிசைப் பெற்றுக்கொண்டது. சூழ்நிலைக் கைதியாக சிறையில் இருந்தாலும் இவரின் சமூகப் பார்வையும் மானிட நேயமும் இவரது முதல் இரு நாவல்களிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பூமாஞ்சோலை என்ற சிறுகதைத் தொகுதியை அவலச் சாவுற்ற தனது நண்பனுக்கு சமர்ப்பணம் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



## உமாஜி

யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்தில் பிறந்த "உமாஜி" (உமாசுதன் கிருபாகரன் ) தன்னுடைய வாழ்க்கையில் கால்நூற்றாண்டை இடம்பெயர்வுகளின் வழி கடந்தவர். ஈழப்போராட்டத்துக்குள்ளேயே பிறந்து வளர்ந்து ஆயுதப்போராட்டத்தின் முடிவையும் கண்டு நிற்கின்ற ஒருவராக, சமூகத்தை கவனிக்கின்ற மனிதராக தனது எழுத்துக்களை முன்வைக்கிறார்.

## நெடுந்தீவு மகேஷ்

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள நெடுந்தீவில் பிறந்த செல்லத்தம்பி மகேஸ், நெமுந்தீவு மகேஸ் என இலக்கிய வட்டத்தினருக்கு அறிமுனமுடைய ஒரு மூத்த படைப்பாளி ஆவார். 2015 ஆம் ஆண்டின் கலாபூ'ண விருது பெற்ற மகேஸ் பள்ளியில் படித்த இளைய பருவ காலத்திலிருந்தே ஆக்க இலக்கிய ஈடுபாடுகொண்டு எழுத்துலகில் பிரகாசித்து வருகின்றார். 1960 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்தே பத்திரிகைகளிலும் கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகளையும் எழுதிவருகிறார். இவரது மனிதத்தைத் தேடி எனற கவிதைத் தொகுப்பும் ஆரணி ஓர் ஆச்சரியக் குறி என்ற ஆசிரிய வாண்மைச் சிறுகதையும் புத்தக வடிவம் பெற்றுள்ளன. ஆசிரியராகவும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகராகவும் ஆரம்பக் கல்வி உதவிப் பணிப்பாளராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றவர்



# தாயுமானவன் நிஷா

வவுனியாவில் பிறந்து வளர்ந்த இவர் வவுனியா கூமாங்குளம் சித்தி விநாயகர் வித்தியாலத்தில ஆரம்ப கல்வியையும் வவுனியா இறம்பைக்குளம் மகளீர் மகா வித்தியாலயத்தில் உயர் கல்வியையும் கற்று தற்போது ஆறு வருடங்களாக தனியார் தொண்டு நிறுவனங்களில் பணியாற்றி வருகிறார். ஊடகத்துறையின் ஆரம்ப கல்வியினை பூர்த்தி செய்த இவரின் முதல் படைப்பு "தாயுமானவன்" எழுத்து மற்றும் பேச்சு துறையில் ஆர்வம் மிக்கவர். அடுத்த படைப்பாக மனங்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் பேசு பொருளோடு தயாராகிக் கொண்டிருக்கிறார்.

# ஞா.ஜெகநாதன்

கலைப்பட்டதாரியான இவர் ஆங்கில ஆசிரியராக, அதிபராக கோட்டக்கல்வி அதிகாரியாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். சமாதான நீதவானாகவும் வவுனியா மத்தியஸ்த சபை உறுப்பினரகவும் வவுனியா கலாச்சார அதிகார சபையின் உபதலைவராகவும் சேவையாற்றுகிறார். 2001 இல் கலைத்துறையில் பிரவேசித்த இவர் பாரம்பரிய ஆய்வு எழுத்தாளராக நாகர் எழு வன்னி - 2013, பேரும் ஊரும் - 2019 ஆகிய இரு நூல்களை ஆக்கியுள்ளார் 15இற்கு மேற்பட்ட பாரம்பரிய ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார் எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் சிறந்த நூலுக்கான விருதினையும் யாழ் இலக்கிய வட்டத்தின் நூலுக்கான சான்றிதழையும் நாகர் எழு வன்னி நூல் 2013 இல் பெற்றது.

## தவநாதன் றொபேட்

வசாவிளானைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தில் வசிப்பவருமாகிய த.றொபேட் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இசைத்துறையில் சிறப்புப் பட்டம் பெற்று விரிவுரையாளராகக் கடமையாற்றுகிறார். இவர் ஒரு பாடகர், இசையமைப்பாளர், கருவியிசைக்கலைஞர் எனப் பல்துறை திறன்களைக் கொண்டவராகவும் இசை உருப்படிகளை புதிதாக உருவாக்கும் ஆற்றல் கொண்டவராகவும் காணப்படுகிறார். ஹார்மோனியம் பக்கவாத்தியமாகப் பயன்படுத்தப்படும் அனைத்து நிகழ்வுகளிலும் அனுசரணை வழங்குவதில் 15 வருடத்திற்கு மேலாக ஈடுபட்டு வருகின்றார். வடஇலங்கைச் சங்கீத சபையின் கலாவித்தகர் பட்டத்தைப் பெற்றவர். பல இறுவட்டுக்களையும் வெளியிட்டுள்ள இவரது முதலாவது நூல் 'விரலிசை' ஆகும்.

# க.ப.சின்னராசா

மயிலிட்டியில் பிறந்த க.ப.சின்னராசா வடஇலங்கைச் சங்கீத சபையின் கலாவித்தகர் பட்டத்ததை 1971 ஆம் ஆண்டு பெற்றதுடன் 1974 ஆம் ஆண்டு யாழ் இராமநாதன் நுண்கலைக் கழகத்தின் சங்கீத ரத்தினம் (டிப்புளோமா) பட்டத்தையும் பெற்றவர். கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் பகுதி நேர மிருதங்க விரிவுரையாளராகக் கடமையாற்றுகின்றார். இவரது நீண்ட கால கலை அனுபவ முதிர்ச்சியின் வெளிப்பாடாக 50 இற்கும் மேற்பட்ட பல்லவிகள் 'பல்லவி அமுதம்' என்ற நூலாக வெளிவந்துள்ளது. 1998 இல் கலாச்சார அமைச்சினால் கலாபூ'ணம் விருது உட்பட லயஞான சுரபி, மத்தளக் கலைச்சுடர், லயஞானபானு, கலைஞான கேசரி, ஞானகலாபமணி போன்ற விருதுகளைப் பெற்றவர்.

## கந்தையா சண்முகலிங்கம்

(1945) இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். வடகிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளராகவும் தொடர்ந்து கல்வியமைச்சின் செயலாளராகவும் பணியாற்றியவர். இதுவரை 11 நூல்கள் 08 மொழிபெயர்ப்பு நூல்கள் வெளிவந்துள்ளன. சிறந்த மொழி பெயர்ப்பாளரான இவர் குமாரி ஜயவர்த்தனா, சி. அரசரத்தினம், ஜெயதேவ உயன் கொட, நியூட்டன் குணசிங்க , பேட்ரம் பஸ்தியாம்பிள்ளை ஆகியோரது நூல்களை மொழி மாற்றம் செய்துள்ளார்.

## செ.டிலக்ஷனா

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை மாணவியான இவர் சபிக்கப்பட்ட பூ, ஈழவாடை ஆகிய இரு நூல்களை எழுதியுள்ளார். இவரது கவிதைகளில் ஈழத்தின் வலிகளையும், பெண்ணிய சாயல்களையும் கண்டு கொள்ள முடிகிறது. பட்டிமன்றங்களிலும் பங்கு கொண்டு வருகிறார்.

பாடசாலை காலங்களில் தமிழ் தின போட்டிகளில் விவாதம், கட்டுரை என்பனவற்றுக்கு அதிகம் பரிசில்கள் பெற்றுள்ளார்.

## ஈழக்கவி

வெலிமடையைச் சேர்ந்த எ.எச்.எம் நவாஸ் ஈழக்கவி என்னும் புனைபெயரில் தனது படைப்புக்களை எழுதிவருகிறார். இவர் பாடசாலை அதிபராகக் கடமையாற்றுவதோடு ஆய்வுக்கட்டுரைகள், கவிதை இலக்கியம் போன்றவற்றில் தனது ஆளுமையை பிரதிபலிக்கின்றார். இதுவரை 2 கவிதை நூல்களை வெளியிட்டுள்ளார்.இவருடைய கவிதை நூலுக்கு கொடகே விருது கிடைக்கப்பெற்றது.

## மாலினி மாலா



அரியாலையைச் சேர்ந்த மாலினி மாலா தற்போது ஜேர்மனியில் வசிக்கிறார். இவர் தனது பதின்ம வயதில் பத்திரிகைகள், வானொலியில் தனது இலக்கியப் பயணத்தை ஆரம்பித்தார். குச்சொழுங்கைகள் காத்திருக்கின்றன, மௌனம் எனும் பேராசை, நான் எனும் நீ ஆகிய நூல்களின் நூலாசிரியர்.

# கந்தையா பத்மநாதன்

காரைநகர் மண்ணின் கல்வித்துறை ஆளுமை க.பத்மநாதன் விஞ்ஞானத்துறையில் ஆரம்பப் பட்டத்தைப் பெற்றவர். தொடர்ச்சியாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல்வேறு முதுநிலைப் பட்டக்கல்விகளைப் பூர்த்தி செய்ததுடன் தொழில்வாண்மைப் பட்டங்களையும் பெற்றுள்ளார். கல்வி, விஞ்ஞானம், மொழி, கலை இலக்கியம், சமயம், திட்ட முகாமைத்துவம் போன்ற துறைகளில் சிறப்பான சேவை ஆற்றி வருகிறார். இலக்கியத்துறையில் கொண்ட ஈடுபாட்டினால் தொடர்ச்சியாக எழுதிவருகிறார். தமிழர் வாழ்வியலில் உள்ள விஞ்ஞான பூர்வமான இருப்புக்களை வெளிக்கொணரும் வகையில் உண்மைகளைத் தேடி எழுதும் ஆர்வத்தினால் பல நூல்களுக்குச் சொந்தக்காரர். படைப்புலகிலும் தொழிலிலும் இனம், மதம், மொழி கடந்த இவருடைய பார்வை சிறப்பானது.


# திருமதி செல்வாம்பிகை வீரசிங்கம்

மானிப்பாயைச் சேர்ந்த திருமதி செல்வாம்பிகை வீரசிங்கம் இலங்கையின் மூத்த நடனக் கலைஞர் கலாபூ'ணம் லீலாம்பிகை செல்வாஜாவின் புதல்வி ஆவார். நுண்கலை சிறப்புப் பட்டதாரியாவார். ஆ.யு பரதநாட்டியத்தை பாரதிதாசன் பல்கலைக்கழகத்திலும் ஆ'ாடை முதுமாணிப் பட்டத்தையும் சென்னை பல்கலைக்கழகத்திலும் கற்றுத்தேர்ந்தார். கலைக்கோவில் நடனப்பள்ளியில் 25 வருடமாக கலைச்சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். பரத நாட்டியம் கற்பித்தல் முறைகள் என்ற நூலை எழுதியுள்ளார்.

## என்.செல்வராஜா

என்.செல்வராஜா அவர்கள் எழுத்தாளரும் மூத்த நூலகவியலாளரும் பன்னூலாசிரியருமாவார். இவர் புலம்பெயர்ந்து ஐக்கிய இராச்சியத்தில் நிரந்தரமாக வசித்து வருகிறார். இதுவரை 40 நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். 'நூல்தேட்டம்' எனப்படும் நூல் விபரப் பட்டியலே இவரது இலக்கியப் பணியின் சிகரமாகும்.


## சுப்பிரமணியம் முரளிதரன்



நல்லூரைச சேர்ந்த சுப்பிரமணியம் முரளிதரன் என்பவர் இ.சு முரளிதரன் என்ற புனைபெயரில் எழுதிவருகிறார். இவர் ஹாட்லிக் கல்லூரியின் ஆசிரியராக பணிபுரிகிறார். கவிதை, சிறுகதை, சினிமா விமர்சனம் போன்ற துறைகளில் ஆர்வமுடையவர். 'ஏகலைவன்' என்ற சஞ்சிகையின் 7 இதழ்களை வெளியிட்டவர். இலங்கையில் முதன்முதலாக சிலேடை வெண்பாக்களை உள்ளடக்கிய தனிப்பாக்களை நூலாக வெளியிட்டவர்.

## திருமதி சிறிதேவி கண்ணதாசன்

சுழிபுரத்தைச் சேர்ந்த திருமதி சிறிதேவி கண்ணதாசன் பரதநாட்டியத்துறையில் நுண்கலைமாணிப் பட்டத்தையும் கல்வியியல் துறையில் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றவர். 20 வருட ஆசிரிய சேவையின் பின் வடமாகாணக் கல்வித்திணைக்களத்தின் ஆசிரிய ஆலோசகராக பணியாற்றி வருகின்றார். பொன்னாலை சந்திர பரத கலாலயம் என்ற நாட்டிய நிறுவனத்தை நடாத்தி வருகிறார்



## ராஜ் சிவா

அறிவியல் எழுத்தாளர்திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் , பருத்தித்துறையை வாழ்விடமாகவும் கொண்டவர். ஹாட்லி கல்லூரியின் பழைய மாணவன். 1984 இல் புலம் பெயர்ந்து இன்று வரை யேர்மனியில் வாழ்பவர். இயற்பியல், குவாண்டம் பிசிக்ஸ், அஸ்ட்ரோ பிசிக்ஸ் ஸ்ட்ரிங் தியரி, பிக்பாங். என்பவற்றை இலகு தமிழில் எழுதுபவர். இதுவரை நான்கு புத்தகங்கள் வெளியாகி இருக்கின்றன.

'எப்போது அழியும் இந்த உலகம்'
'நிலவில் ஒருவன்'
'இந்த உண்மைகள் ஏன் மறைக்கப் படுகின்றன'
'இறந்த பின்பும் இருக்கிறோமா'



# புதியசொல்

ஈழத்திலிருந்து வெளிவரும் காலாண்டுச் சிற்றிதழ் கலை இலக்கியம் சார்ந்த எழுத்துச் செயற்பாட்டுக்கான இதழாக ஈழத்தின் கலை இலக்கிய செயற்பாட்டுக்காக தொடர்ச்சியாக உரையாடல்களை நடாத்தி வருகின்றது. இதன் ஆசிரியர் சி.கிரு'ாந், திருநெல்வேலி.



# கலைமுகம்

கலைமுகம் நீண்டகாலமாக ஈழத்து இலக்கிய பரப்பில் இயங்கிவரும் சிற்றிதழ். ஈழத்தின் கலை இலக்கிய உரையாடல்களையும் அறிமுகங்களையும் விரிவான தளத்தில் பதிவு செய்யும் இதழ். இதன் ஆசிரியர் தி.செல்மர் எழில், திருமறைக் கலாமன்றம் யாழ்ப்பாணம்..

# கந்தையா சர்வேஸ்வரன்



கட்டைப்பிராயை பிறப்பிடமாகக் கொண்ட க.சர்வேஸ்வரன் சென்னைப் பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் கலைமாணிப்பட்டத்தையும் டெல்லி ஜவர்கல்லால் நேரு பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் முதுமாணிப்பட்டத்தையும் 2005 இல் 'சர்வதேச உறவுகள்' துறையில் கலாநிதிப்பட்டத்தையும் பெற்றவர். விரிவுரையாளராக, ஆய்வாளராக, விமர்சகராக பல்வேறு நாடுகளில் நடைபெற்ற மாநாடுகள், செயலமர்வுகளில் கலந்துகொண்டு இலங்கை இனப்பிரச்சினையின் பல்வேறு பரிமாணங்களையும் கல்வியியலாளர்கள் மத்தியில் வெளிப்படுத்தி வந்தார். தனது கலாநிதிப் பட்டத்திற்காக ஆங்கில மொழியில் இருந்த ஆய்வேட்டினை தமிழில் எளிமையாகவும் சுவையாகவும் இலங்கைத் தமிழ் அரசியல் மோதலும் மிதவாதமும் என்ற நூலாக மொழிமாற்றம் செய்து வெளியிட்டுள்ளார். பன்முக ஆற்றல் கொண்ட கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் தற்பொழுது வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சராக பணியாற்றுகிறார்.



## ஜீவநதி

ஜீவநதி சஞ்சிகை ஜனவரி 18,2010 இல் 13ஆவது ஆண்டு மலராக வெளிவந்தது. 13 ஆண்டுகளும் தொடர்ச்சியாக ஜீவநதி வெளிவருவதற்கு தனது அயராத உழைப்பை வழங்கிவருபவர் பரணீதரன். நமது எழுத்தாளர்களின் பல்வகைப்பட்ட படைப்புகளை தொடர்ச்சியாக உள்வாங்கி சஞ்சிகையூடாக வெளியிட்டு வருகிறார். ஜீவநதியில் பலநூறு எழுத்தாளர்கள் பவனி வந்து கொண்டிருக்கிறார்கள்.




## நிமிர்வு

தமிழர் தாயகத்தில் இருந்து 2017 மாசி மாதத்தில் இருந்து மாதாந்த இதழாக நிமிர்வு இதழ் தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருக்கின்றது.

அரசியல், சமூகம், பொருளாதாரம் தொடர்பிலான பல்வேறு விடயங்கள் கட்டுரைகளாக வெளியாகியுள்ளன. அதனையும் தாண்டி பல்வேறு பயனுள்ள உரையாடல்கள், உரைகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. முயற்சியாளர்கள் பலரையும் வெளிக்கொண்டு வந்திருக்கிறது.



## அனாதியன்

அனாதியன் என்று அழைக்கப்படும் ஜெகதீஸ்வரன் மார்க் ஜனாத்தகம் யாழ் பல்கலைக்களகம் கலைப்பிரிவில் ஒன்றரை வருடப் பட்டப்படிப்பின் பின் தற்போது புலம் பெயர் தமிழன். தமிழ் தேசிய கவிஞன், ஓவியன் (நூலின் மூன்று அட்டைப்படங்களும் அவரால் வரையப்பட்டவை). வெளியான நூல்கள் மூன்று, மூன்று தேசியப் பாடல்கள், இரண்டு பாடல்கள் தேனிசை செல்லப்பாவால் பாடப்பட்டது. தொடர்ந்து மக்களையும் இயற்கையையும் நேசிப்பவன்.



## செல்வமனோகரன்

நயப்பு, வியப்பு, மதிப்பீடு, விமர்சனம் போன்றவாறான பல்வேறு தளங்களிலும் உரையாற்றிவரும் மேடைக்குகந்த பேச்சாளரான இவர் மிகச் சிறந்த வாசகரும் எழுத்தாளருமாவார். சொற்களால் அமையும் உலகு - சில உரைகள் - சில விமர்சனங்கள், காஷ்மீர சைவமும் சைவ சித்தாந்தமும், தமிழில் மெய்யியல், இலங்கையில் சைவத் தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சியில் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி போன்ற நூல்களை வெளியிட்டுள்ளார். தமிழ் ஆய்வியலில் மிகுந்த ஈடுபாடுடைய இவர் தூண்டி சிற்றிதழின் ஆசிரியர். தூண்டி ஊடாக பத்திற்கும் மேற்பட்ட நூல்களை பதிப்பித்துள்ளார். யாழ் பல்கலைக்கழகத்தின் இந்து நாகரிகத் துறையின் விரிவுரையாளராவார்.


நிலா நாழிகை
மணற்கும்பி
குப்பி
துளிர்விடும் துயரங்களும் நம்பிக்கைகளும்
யாழ்ப்பாண நினைவுகள் 3
இறந்த பின்னும் இருக்கிறோமா?
பருத்தித்துறை நண்பர்கள்
POINT PEDRO FRIENDS